செ.வெ.எண் : 37 நாள்: 23.08.2020

**கோயம்புத்தூர் மாவட்டம்**

# கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவலை தடுக்க அதிகளவிலான காய்ச்சல் பரிசோதனை முகாம்களை அதிகப்படுத்திட மருத்துவர்களுக்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் உத்தரவு !!!

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (23.08.2020) கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகள் தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடன் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டார்கள். இக்கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர்.ஜெ.ராதாகிருஷ்ணன் இ.ஆ,ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையர் திரு.சுமித்சரண் இ.கா.ப., மேற்கு மண்டல காவல்துறை துணை தலைவர் திரு.கே.எஸ்.நரேந்திரநாயர், இ.கா.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு இ.கா.ப., மாநகராட்சி ஆணையாளர் திரு.ஷ்ரவண்குமார் இ.ஆ.ப., சுகாதாரத்துறை இயக்குநர் மரு.வடிவேலன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ரமேஷ்குமார், மாநகர காவல் துணை ஆணையர் திரு.கோ.ஸ்டாலின், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்(பொ) மரு.காளிதாசு, இ.எஸ்.ஐ மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கிருஷ்ணா, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திரு.ரமேஷ்குமார், இந்திய மருத்துவ சங்க மாநிலத்தலைவர் மரு.சி.என்.ராஜா, மாநிலச் செயலாளர் மரு.ஏ.கே.ரவிக்குமார் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாவட்டம் இந்தியாவின் முக்கியமான தொழில்நகரமாகவும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் மையமாகவும் திகழ்ந்து வருகின்றது. இந்நிலையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவலால் ஏற்படும் உயிரிழப்பு குறைவாக உள்ளதுடன். அதிலிருந்து மீள்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. மேலும், மருத்துவர்களால் அனைத்து பகுதிகளிலும் நடத்தப்படும் மருத்துவமுகாம்களை அதிகரிக்கும்படி சுகாதாரத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. முகாம்களில் வைரஸ் தொற்று அறிகுறி உள்ளவர்களை விரைவாக கண்டறிந்து அவர்களை தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு தளர்வுகளை வழங்கி வருவதுடன், வளர்ச்சித்திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய முதலீடுகளை ஈர்த்தும், ஊரகத் தொழில்களை மீட்டெடுத்தும் தொழில் வளத்தைப் பெருக்க புதிய திட்டங்களை செயல்படுத்தியும் வருகின்றார்கள்.

கொங்கு மண்டலத்தின் பொருளாதார மையமாக விளங்கும் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 25.06.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வருகைபுரிந்து கொரோனா தடுப்பு நடவடிக்கைகள், வளர்ச்சிச் திட்டப் பணிகள் மற்றும் முக்கிய திட்டங்கள் குறித்து அரசு அலுவலர்களுடன் நேரடியாக ஆய்வு மேற்கொண்டதுடன், கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிகளில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டுவருவதற்கு அலுவலர்களை பாராட்டினார்கள்.

அத்துடன், கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்த தொழிற்த்துறையினர், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மகளிர் சுய

உதவிக்குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் தனித்தனியாக ஆலோசனை மேற்கொண்டு அவர்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்தார்.

மேலும், கிராமப்புற குறுந்தொழில்களை ஊக்கப்படுத்தும் விதமாக **தமிழ்நாடு ஊரக புத்தாக்கத்திட்டத்தின் கீழ்** கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பின் மூலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் **ரூ.5.16 கோடி ரூபாய் மதிப்பில் 5047 பயனாளிகள்** பயன்பெறக் கூடிய வகையில் கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்ட முன்னோடி வங்கியின் மூலம் கொரோனா கால **COVID-19 சிறப்பு கடனுதவியாக 8,284 தொழில்நிறுவனங்களுக்கு ரூ.597 கோடி** வழங்கப்பட்டுள்ளது.

இக்கடனுதவி, ஒவ்வொரு நிறுவனங்கள் ஏற்கனவே பெற்ற கடனுதவியிலிருந்து 20% வழங்கப்பட்டுள்ளது. அதுபோலவே, மாவட்ட தொழில் மையம் மூலம் கடந்தாண்டு **397 தொழில்நிறுவனங்களுக்கு ரூ.12 கோடி மானியம்** வழங்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் தொழில்துறை, வணிகத்துறை உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், அரசால் வழங்கப்பட்டுள்ள கடனுதவிகளால் தொழில்துறையினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று காலத்தில் வாழ்வாதார மேம்பாட்டிற்கு நகர்ப்புற பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளில், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி நிர்வாகத்தினரால் அடையாள அட்டை வைத்துள்ள சாலையோர வியாபாரிகளுக்கு வங்கி கடனாக ரூ.10ஆயிரம் வழங்கும் திட்டம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் அடையாள அட்டை வைத்துள்ள 5,580 சாலையோர வியாபாரிகளுக்கு வங்கி கடனுதவி வழங்கப்படவுள்ளது.

தற்போது மாவட்டங்களுக்குள் பயணம் மேற்கொள்ள E-Pass வழங்கப்படும் முறை மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பணி

நிமித்தமும், தொழில்புரிபவர்களும் எளிதாக சென்று வரும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றதொரு பேரிடர் காலங்களில் தமிழ்நாடு அரசு முழு கவனமுடன் செயல்பட்டு வருவதுடன், வளர்ச்சித்திட்டப்பணிகளை முழுகவனமுடன் எவ்வகையிலும் பாதிக்கப்படாதவாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதுபோலவே, இந்தியாவில் கொரோனா தொற்று பேரிடர் காலத்திலும் அதிகளவிலான முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழகம் முன்னிலை வகித்து வருகின்றது. (20.07.2020) அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தான 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ரூ.490 கோடி மதிப்பில் எல்.கி. நிறுவனம், அக்வா குழுமம், ஜே.எஸ்.ஆட்டோ நிறுவனம் ஆகிய 3 நிறுவனங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொழில் தொடங்குவதாக விருப்பம் தெரிவித்துள்ளன.

**மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் சிறப்பு முயற்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சத்து மாத்திரைகள் அடங்கிய தொகுப்பினை, 10 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கும் பணியானது,** அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் வாயிலாக ஒவ்வொறு குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து அனைவரும் தங்களை பாதுகாத்துக்கொள்ள தற்போது வழங்கப்பட்டு வரும் நோய் எதிர்ப்பு சத்து மாத்திரைகளை முறையாக உட்கொண்டு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகபடுத்திக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் பெருந்தொற்றிலிருந்து காக்க சிறப்பான போர்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதற்கு சற்றும் குறையாத வகையில் பொதுமக்களுக்கான இயல்பு வாழ்க்கையை பாதிக்கப்படாத வகையிலும், தொழில் துறையினரின் துயர் துடைக்கும் வகையிலும் பல்வேறு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம்,

ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தெரிவித்தார்.

**தொடர்ந்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில் சிறப்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் பன்முக தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக, மாவட்டத்திலுள்ள அனைத்துறை உயர் அலுவலர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் அனைத்துதுறை அலுவலர்கள் மேற்கொண்ட மற்றும் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று பிளாஸ்மா வங்கி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பத்திரிக்கைத் துறை சேர்ந்த நண்பர் ஒருவர் பிளாஸ்மா தானம் செய்து அனைவரும் ஒரு முன்மாதிரி திகழ்கிறார். இதற்கு முன் பரிசோதனை முறையில் ஒரு கல்லூரி மாணவி மற்றும் இரண்டு இராணுவ வீரர்கள் பிளாஸ்மா தானம் வழங்கியுள்ளனர். இங்கு துவங்கப்பட்டு பிளாஸ்மா வங்கி சிறப்பாக செயல்பட்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் 8532 நபர்கள் பூரண குணமடைந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு குணமடைபவர்களின் சதவீகிதம் 78% ஆகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத்திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ், மாநகராட்சி சார்பில்

எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், சென்னையில் பாதிக்கப்படுவோர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6,312 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 1,902 நபர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் காய்ச்சல் முகாம்களை அதிகரிக்கவும், சாதாரண காய்ச்சல் மற்றும் சளி போன்ற அறிகுறிகள் இருந்தலே உடனடியாக அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள் உள்ளதா என்பது குறித்து பரிசோதனை மேற்கொண்டு, பரிசோதனை முடிவுகளின் விரைவாக சிகிச்சை அளிக்கப்படும். இவ்வாறு செய்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து விரைவாக சிகிச்சை அளிப்பதன் வாயிலாக கொரோனா வைரஸ் தொற்று பரவலை விரைவாக குறைக்க முடியும்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சிகிச்சை அளிப்பதற்கென்று படுக்கை வசதிகள் அதிகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்தவொரு நிலையினையும் சமாளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் 1,79,000 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்று சிகிச்சைக்கு 5816 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் வெளியில் செல்லும் போது கட்டாயம் முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியை பின்பற்றவேண்டும். சாதாரண சளி, காய்ச்சல் இருப்பதை அலட்சியப்படுத்தாமல், விரைவாக பரிசோதனை மேற்கொள்ளவேண்டும். ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைக்கு வந்தால் உடனடியாக சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியும்.

இந்தியாவிலே தமிழகத்தில்தான் அதிக அளவிலான RTPCR பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகிறது. பரிசோதனை முடிவுகள் 24மணி நேரத்தில் கிடைக்கின்றன. இனிவரும் காலங்களில் பரிசோதனை முடிவுகளை

நோயாளிகளின் கைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தனியார் மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளுடன் இணைந்து செயல்படவேண்டும். தனியார் மருத்துவமனைகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் அதிகப்படுத்தவேண்டும். என மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் மரு.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**